<u>**சுருக்கம்**</u>

மாற்றுத் திறனாளிகள் நலன்– மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண நிதி உதவித் தொகை மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம் – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பெயரில் தன் வைப்புக் கணக்கு துவங்க அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண். 18 நாள்:02–03–2012

மாசி 18, திருவள்ளுவர் ஆண்டு, 2043

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.395, நிதி(சம்பளம்)த் துறை, நாள் 07–08–1998.
2. அரசாணை(நிலை) எண்.23, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–06–2011.
3. அரசாணை(நிலை) எண்.24, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–06–2011.
4. அரசாணை(நிலை) எண்.28, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 02–08–2011.

மீண்டும் படிக்க:-

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், கடிதம் எண்.1104/ம.இ.க./2011, நாள் 30.11.2011.

-------

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு திருமண நிதியுதவி வழங்கும் திட்டங்களின் கீழ், ஒரு பயனாளிக்கு தற்பொழுது வழங்கப்படும் திருமண நிதி உதவித் தொகையான ரூபாய் 25,000/– உடன், கூடுதலாக மணப்பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய நான்கு கிராம் தங்கம் (1/2 சவரன்) 22 காரட்டில் இலவசமாக வழங்கவும், இச்செலவினத்தை மேற்கொள்ள கூடுதலாக ரூ.30,32,400/– (ரூபாய் முப்பது இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு திருமண நிதியுதவி வழங்கும் திட்டங்களின் கீழ் பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் தொகை ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கவும் இதனுடன் மணப்பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய நான்கு கிராம் தங்கம் (1/2 சவரன்) 22 காரட் இலவசமாக வழங்கவும், இச்செலவினத்தை மேற்கொள்ள ரூ.66,70,520/–க்கு (ரூபாய் அறுபத்தாறு இலட்சத்து எழுபதாயிரத்து ஐநூற்று இருபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**3.** மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையால் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் அளிக்கும் விலைப் புள்ளியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் வங்கி அல்லது நிறுவனத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் நான்கு வகையான திருமண நிதியுதவித் திட்டங்களுக்கு திருமாங்கல்யத்திற்காக வழங்கப்படும் **4** கிராம் **(22** காரட்**)** தங்க நாணயத்தை வாங்கி வழங்கவும், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை தங்கம் வாங்கும் பொழுது, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தின் மூலம் வாங்கப்படும் தங்கத்தின் அளவினை முன்கூட்டியே சமூக நல இயக்குநருக்கு தெரிவித்து அதன் அடிப்படையில் ஒப்பந்த புள்ளியில் நிர்ணயிக்கப்படும் விலையை (Rate Contract) கோரி பெற ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**4.** தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில் பின்வருமாறு அரசாணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

i. மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆணையரின் பெயரில் தன் வைப்பு கணக்கு ஒன்று துவக்கவும், அதில் ரூ.**49,52,920/–**ஐ வரவு வைக்க மாநில கணக்காயர், சென்னை மூலம் பாரத மாநில வங்கி கருவூலகக் கிளை, சென்னை**–6** மற்றும் சம்பள கணக்கு அலுவலகம் (தெற்கு) சென்னை**–35** ஆகியோருக்கு அனுமதி அளிக்குமாறும்.

ii. வருவாய் செலவு கணக்குத் தலைப்புகளில் உள்ள நிகரான தொகையினை பற்று வைத்து, நிகரான தொகையினை தன் வைப்புக் கணக்கில் வரவு (எதிர் வரவு) செய்ய அனுமதி அளிக்குமாறும்

iii. வருவாய் செலவு கணக்குத் தலைப்புகளிலிருந்து தொகையினை மாற்றம் செய்ய பட்டியல்களை அனுமதித்து, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் தன் வைப்பு கணக்கில் வரவு வைக்கவும், சம்பள கணக்கு அலுவலர்(தெற்கு) சென்னை**–18** அவர்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**5.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு மாற்றுத் திறனாளிகளின் பல்வேறு திருமண நிதியுதவி வழங்கும் திட்டங்களுக்கு மேலே படிக்கப்பட்ட அரசாணை இரண்டு மற்றும் மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகையில் திருமாங்கல்யத்திற்காக **(4** கிராம் **(22** காரட்**)** ஒரு நபருக்கு**)** தங்கம் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.**49,52,920/–**ஐ (ரூபாய் நாற்தொன்பது இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பெயரில் புதிதாக தன் வைப்பு கணக்கு துவக்கி அதில் இத்தொகையை தொடக்க நிதியாக பற்று வைத்திட அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி **5–**ல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை இவ்வாணையில், இணைப்பில் குறிப்பிட்டுள்ள வருவாய் செலவு கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். இச்செலவினங்களுக்கு வருவாய் செலவு கணக்கு தலைப்பிலிருந்து தொகையினை பெற்று பணமாக வழங்காமல் பின்வரும் தன் வைப்பு கணக்கில் வரவு வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:

K. Deposits on Advances (B) Deposits not bearing interest 8443-00-Civil Deposists-106 Personal Deposits AA- Personal Deposits.
(DP Code.8443-00-106-AA-000F) (Receipts)
(DP Code 8443-00-106-AA-0005) (Outgo)

7. மேற்கூறிய செலவின தொகையினை வருவாய் செலவு கணக்கு தலைப்புகளில் உள்ள நிகரான தொகையினை பற்று வைத்து அந்நிகரான தொகையினை தன் வைப்பு கணக்கில் வரவு (எதிர் வரவு) செய்யவும், மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்குமாறு மாநில கணக்காய்வு தலைவர், சென்னை–35 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் பெயரில் தன்வைப்பு கணக்கு புதிதாக துவங்க, மாநில கணக்காயரின் அனுமதி கிடைத்தவுடன் மேலே பத்தி 5–ல் கூறப்பட்டுள்ள தொகையினை தொடக்க நிதியாக கொண்டு தன் வைப்பு கணக்கில் வரவு வைத்திட சம்பள கணக்கு அலுவலர்(தெற்கு), சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது பெயரில் தன்வைப்பு கணக்கு தலைப்பு தொடங்கி, அதனை செயல்படுத்தும்போது மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கூறிய நடைமுறைகளை தவறாது பின்பற்றுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.நிதி(சந)/10859/2012, நாள் 2.3.2012ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35(தெற்கு).
தலைமைக் கணக்காயர், சென்னை–9/18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந)த் துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>இணைப்பு</u>

அரசாணை(நிலை) எண். 18, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 02–03–2012

**மாற்றுத் திறனாளிகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் தங்க நாணயத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் தன் வைப்பு கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய தொகை விவரம்.**

| வ.எண். | கணக்குத் தலைப்பு | திருத்திய நிதி ஒதுக்கீடு 2011–2012 | தங்க நாணயத்திற்காக தன் வைப்புக் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | **பார்வையற்றோருக்கான திருமண உதவி**<br><br>2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநில திட்டம் KL பார்வையற்றோரைத் திருமணம் செய்யும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகைகள்–09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு.2235–02–101 KL 0934) | ரூ.40,09,000/– | ரூ.10,10,800/– |
| 2. | **வாய்பேசாத மற்றும் காதுகேளாதோருக்கான திருமண உதவி**<br><br>2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநில திட்டம் LM வாய்பேசாத மற்றும் காது கேளாதவர்களை திருமணம் செய்ய முன்வரும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகைகள்–09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு.2235–02–101 LM 0931) | ரூ.57,56,000/– | ரூ.14,65,660/– |
| 3. | **ஒரு கை அல்லது ஒரு கால் இழந்தோரை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கு திருமண உதவி**<br><br>2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநில திட்டம் LJ மாற்றுத் திறனாளிகளை மணந்துகொள்ளும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகைகள்–09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு.2235–02–101 LJ 0937) | ரூ.57,56,000/– | ரூ.14,65,660/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | **மாற்றுத் திறனாளிகளை மணந்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவி** 2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநில திட்டம் MM மாற்றுத் திறனாளிகளை மணந்துகொள்ளும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை–09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (கு.தொ.கு.2235–02–101 MM 0930) | ரூ.40,09,000/– | ரூ.10,10,800/– |
| | **மொத்தம்** | **ரூ.1,95,30,000/–** | **ரூ.49,52,920/–** |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்,

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.